

பேராசிரியர் அவர்களின் சகோதரி திருமதி இராஜம் இராமதாஸ் அவர்கள் உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் (20.09.2024), மறைவுற்றார். இச்செய்தியறிந்து சென்னை, இராயப்பேட்டையிலுள்ள அவரது இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பேராசிரியர் அவர்களின் மகன் அன்புச்செல்வன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு மற்றும் பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ரெட்டிபாளையத்தில் ரூ 63.71லட்சம் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைப்பதற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணியை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், துணை சேர்மன் ஜெயபாலன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன் உள்ளனர்.

### பழநி தண்டாயுதபாணி சாமி திருக்கோயிலுக்கான

# பஞ்சாமிர்தம் தயாரிக்க ‘ஆவின்’ நெய் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது!

## சமூக வலைதளத்தில் பொய்ச் செய்தி பரப்பியவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை – பழனி தண்டாயுதபாணி சாமி திருக்கோயில் மறுப்பு செய்தி!

பழநி, செப். 22 -

சமூக வலைதளத்தில் இருவர் திருப்பதி லட்டு தயாரிக்கும் நிறுவனமே பழநி திருக்கோயிலுக்கு பஞ்சாமிர்தம் தயாரிக்க நெய் விநியோகம் செய்யப்படுவதாக பொய்ச் செய்தியை பரப்பி வருகின்றனர். அவர்கள் மீது குற்றவியல் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பஞ்சாமிர்தம் தயாரிக்க ஆவின் நெய் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்று பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மறுப்புச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மறுப்புச் செய்தி வருமாறு :

X.com என்ற சமூக தளத்தில், Vinoj P Selvam (@VinojBJP), மற்றும் Selva Kumar (@Selvakumar_IN) ஆகியோர் “திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு நெய் விநியோகம் செய்த திண்டுக்கல் A.R.Foods நிறுவனம் தான் பழனி முருகன் கோவிலுக்கும் நெய் விநியோகம் செய்கிறது” என்றும், ”திருப்பதி லட்டு தயாரிக்க சப்ளை செய்யப்பட்ட நெய்யில் மாட்டு இறைச்சி கொழுப்பு, பன்னி இறைச்சி கொழுப்பை கலந்து விற்ற உத்தமர் ராஜசேகர்தான் (AR Foods) பழனி முருகன் கோவிலுக்கும் நெய் சப்ளை செய்கிறார்” என்றும், பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் பக்தர்களை ஏமாற்றும் பொருட்டும், தமிழ்நாடு அரசின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், பக்தர்கள் மத்தியில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்படும் சூழ்நிலையை உருவாக்கவும், மதக்கலவரத்தை தூண்டிவிட்டு மனித உயிர் இழப்புகள் ஏற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிடவும் திட்டமிட்டு அவதூறு செய்திகளை மேற்படி இரு நபர்களும் பரப்பியுள்ளனர்.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் மூன்றாவது படை வீடாகத் திகழும் பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலிருந்து தயார் செய்யப்படும் தரமான பஞ்சாமிர்தத்தினை அருட்பிரசாதமாக பெற்றுச் செல்கின்றனர்.

பஞ்சாமிர்தம் தயார் செய்வதற்குத் தேவையான வாழைப்பழம், நாட்டுச் சர்க்கரை, தேன், பேரீச்சம் பழம், ஏலக்காய், கற்கண்டு மற்றும் நெய் ஆகிய முதல் தரமான மூலப்பொருட்களே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அவற்றில் நெய்யினை திண்டுக்கல் ஆவின் நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது எனத் தெரி வித்து க்கொள்ளப்படுகிறது.

மேலும் இத்திருக்கோயிலின் பஞ்சாமிர்த தயாரிப்பினை அவ்வப்போது உணவுப்பாதுகாப்பு துறையால் தரப்பரிசோதனை செய்து வரப்படுகிறது. பஞ்சாமிர்த தயாரிப்பு மூலப்பொருட்களில் எவ்வித கலப்பட பொருள்களோ, தரம் குறைந்த பொருள்களோ இருப்பதாக உணவுப் பாதுகாப்புத் துறையால் எப்போதும் தெரிவிக்கப்பட்டதில்லை.

மேலும் மேற்படி அவதூறு செய்திகளைப் பரப்பிய நபர்கள் மீது உரிய குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே பழனி திருக்கோயில் நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தவும், தமிழ்நாடு அரசின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், பக்தர்கள் மத்தியில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்படும் சூழ்நிலையை உருவாக்கவும், மதக்கலவரத்தை தூண்டிவிட்டு மனித உயிர் இழப்புகள் ஏற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிடவும் திட்டமிட்டு தீய உள்நோக்கத்துடன் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டுவரும் அவதூறு செய்திகளை யாரும் நம்ப வேண்டாம் என பக்தர்களையும் பொதுமக்களையும் திருக்கோயில் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் இதுபோன்ற அவதூறான செய்திகளை சமூக ஊடகங்களில் எவரும் வெளியிடவோ பரப்பவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட இருளப்பட்டி ஊராட்சியில் PMGYS திட்டத்தின் கீழ் ரூ 1 கோடியே 81 லட்சம் மதிப்பீட்டில் இருளப்பட்டி ST சாலை முதல் நாகலூர் சாலை வரையில் தார் சாலை அமைக்கும் பணியை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்.முனைவர் பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி , பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.முத்துக்குமார் ஏற்பாட்டில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி தொடங்கி வைத்தார். உடன் உண்ணாமலை குணசேகரன்,ஒன்றிய குழு பெருந்தலைவர் ஜெயக்குமார், கிளை கழக செயலாளர்கள் ஆறுமுகம், பன்னீர்செல்வம், முத்து, சொக்கன், மணிவண்ணன், விஜயகுமார், ரமேஷ்குமார்,உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – கயல்விழி செல்வராஜ் மற்றும் இல.பத்மநாபன் – கே.ஈஸ்வரசாமி எம்.பி. பங்கேற்பு!

# திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் ரேக்ளா பந்தயம்!

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. அறிக்கை!

திருப்பூர், செப்.22 -

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாநிலம் தழுவிய மாபெரும் ரேக்ளா பந்தயம் என்று விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. அறிவித்துள்ளார்.

மேலும் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :

திருப்பூர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், மாநிலம் தழுவிய மாபெரும் ரேக்ளா பந்தயம், இன்று ( 22.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.30 மணியளவில், சாமராயன்பட்டி, உடுமலைப்பேட்டையில் நடைபெறவிருக்கின்றது. இந்நிகழ்ச்சிக்கு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன்,எம்.சி. தலைமையேற்கின்றார். பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலை பொறுப்பேற்கின்றார். திருப்பூர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆ.ருத்ரப்பன் வரவேற்புரையாற்றுகின்றார், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அவைத்தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ஜெயராமகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்குகின்றார்!

இப்போட்டியினை செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர். மேலும் இந்நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கு.சண்முகசுந்தரம், கோவை தெற்கு மாவட்டக் கழகப் பொருளாளரும் ரேக்ளா தலைமைச் சங்க பொறுப்பாளருமான சி.ஜெயபிரகாஷ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, உடுமலை நகரக் கழகச் செயலாளர் செ.வேலுச்சாமி, உடுமலை நகர மன்றத் தலைவர் எம்.மத்தின், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வெ.மகாலிங்கம், சி.சியாம் பிரசாத், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் நா.ராமசாமி, எம்.ஆர்.பாபு, யு.என்.பி. குமார், எம்.பர்வதவர்த்தினி, மடத்துக்குளம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ஏ.சாகுல் அமீது, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பி.எஸ்.தங்கராஜ், குமரலிங்கம் பேரூராட்சி மன்றத் தலைவர் சர்மிளாபானு ஜாகீர் உசேன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கே.அழகர்சாமி, அணியின் மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.கார்த்திக், பைந்தமிழ் பாரி, எஸ்.ஆர்.பார்த்திபன், வே.நம்பி, நிவேதா ஜெசிகா, ஏ.வி.ஆர். கோபால்ராம், மு.வாசிம் ராஜா, சுரேஷ்.ஜெ.மனோகரன், வே.கௌதமன், திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், திருப்பூர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆர்.சக்திகுமார், மாவட்டக் கழக விவசாய அணி அமைப்பாளர் வி.ரகுபதி, வழக்கறிஞரணி அமைப்பாளர் டி.எஸ். பொன்ராஜ், இலக்கிய அணி அமைப்பாளர் என்.தங்கவேல், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பா ளர் மா.கண்ணிமுத்து, மகளிரணி அமைப்பாளர் செ.அனிதா செல்வராஜ், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எல்.லதா, திருப்பூர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் கே.ஐயப்பன், ஆர்.மோகன்ராஜ், கே.கவின்ராஜ், என்.கனகராஜ், பா.சசிகுமார், எஸ்.ரபியுல்லா, தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஆ.நவீன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எஸ்.கே. மெய்ஞானமூர்த்தி, கே.செந்தல்குமார், டி.செழியன், எஸ்.ராஜமாணிக்கம், சி.கிரி, எம்.எஸ்.முரளி, எஸ்.என்.காணியப்பன், ஜி.கதிர்வேல், என்.கமலக்கண்ணன், பேரூர்க் கழகச் செயலாளர்கள் ஆர்.ஏ. சாதிக் அலி, என். பாலகிருஷ்ணன், ஏ.பாலகிருஷ்ணன், வெ.உதய குமார், எம்.எஸ்.ஆறுச்சாமி, அ.அகத்தூர்சாமி, கே.காளிமுத்து, ஆகியோர் பங்கேற்கின்றனர். குமரலிங்கம் பேரூர்க் கழகச் செயலாளர் எம்.ஆச்சிமுத்து நன்றியுரையாற்றுகின்றார்.

இவ்வாறு கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், எம்.பி. தெரிவித்துள்ளார்.

# தமிழ் நாம்! தமிழர் நாம்!







தமிழ்நாம்! தமிழர்நாம்!
தலைநி மிர்ந்த இனம்நாம்!
அறிவுநாம்! ஆற்றல்நாம்!
திறப்புநாம்! புதுமை நாம்!
நெறியில் புகழை
நிறுத்திவைத்த மரபுநாம்
பிறப்பின் இறப்பின்
பெருமை நாம்! நாம்!
மெய்யிது ஆம்! ஆம்! ஆம்!

தந்தன தந்தன
தந்தனப் பாட்டுப் பாடி
வெந்ததைத் தின்பது
விதிவந்து சாவது
கந்தை வாழ்வெனும்
கதையினை மாற்று!
சிந்தையில் சூரியத்
தீப்பந்தம் ஏற்று! நீ
புதுமையின் ஒளியூற்று!

குறள்நாம்! சிலம்புநாம்!
குறையிலா மணிமே கலைநாம்!
சிந்தை புதிது
தெரிந்து செய்த
தந்தை பெரியார்
தடமும்நாம்! அண்ணா
தந்த நடையும்நாம்!
கலைஞர் தயாரித்த
படையும் நாம்! நாம்! நாம்!

கவிப்பேரருவி
**ஈரோடு தமிழன்பன்**



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு மு. நடராசன்
### செப்டம்பர் 22 (2004)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் இருபத்தைந்து ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பத்து ஆண்டுகள் பகுதிக் கழகச் செயலாளராகவும், மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்டப் பொருளாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 110வது வார்டு கவுன்சிலராக இருமுறையும், மண்டலக்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவரது பணியினை பாராட்டும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருமுறை கணையாழி பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எஸ்.முத்துக்குமார்
### செப்டம்பர் 22 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து கோவை பகுதியில் கழக வளரபாடுபட்டவர்.

1953ஆம் ஆண்டு கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை ஏற்று கலந்து கொண்டதற்காக தண்டனை பெற்று கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் இருந்தபோது, மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்துவிட்டு விடுதலை பெறலாம் என்று அன்றைய அரசாங்கம் சொன்னபோது, “எனது உயிரற்ற உடல் வேண்டுமானல் வெளிய வரும். ஆனால், நான் மன்னிப்பு கேட்டு வெளியே வரமாட்டேன்.” என்ற முழக்கமிட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

சிறைவாசம் முடிந்து விடுதலை அடைந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறைவாசலில் வந்து வரவேற்ற பெருமைக்குரியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**